ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2461/44 - 2025 නොවැම්බර් මස 07 වැනි සිකුරාදා - 2025.11.07

*2461/44 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்**

**3 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் பிரிவு 3 இன் உபபிரிவு (3) இனால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2023, திசெம்பர் 31 ஆந் திகதிய 2364/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினால் இறுதியாகத் திருத்தப்பட்ட 2022, திசெம்பர் 31 ஆந் திகதிய 2312/67 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கட்டளையின் அட்டவணை IV இன் நிரல் II இல் குறிப்பிடப்பட்டுள்ள இயைபு முறைக் குறியீடு 7103.10 மற்றும் அதற்கான நேரொத்த பதிவில் நிரல் III மற்றும் நிரல் IV இல் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை நீக்குவதன் மூலமும் இதனகத்தேயுள்ள அட்டவணையின் நிரல் I மற்றும் II இல் குறிப்பிடப்பட்டுள்ள இயைபு முறைத் தலைப்பு மற்றும் இயைபு முறைக் குறியீடு என்பவற்றிற்கு நேரொத்த நிரல் III இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைச் சேர்த்து நிரல் IV இல் விலக்களிப்பு செய்வதன் மூலமும் திருத்தியமைக்கின்றேன்.

இக் கட்டளையானது 2025, நவெம்பர் 08 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும்.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2025, நவெம்பர் 07.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| *இ.மு. தலைப்பு (I)* | *இ.மு. குறியீடு (II)* | *விபரம் (III)* | *விலக்களிப்பு (IV)* |
|---|---|---|---|
| **71.03** | | **வேலைப்பாடமைந்த அல்லது வேலைப்பாடற்ற அல்லது தரம் பிரிக்கப்படாத ஆனால் கோவைப்படுத்தப்படாத விலைமதிப்பார்ந்த கற்கள் (வைடூரியங்கள் தவிர்ந்த), விலைமருவிய கற்கள்; கொண்டு செல்வதற்கு இலேசானதாகத் தற்காலிகமாக கோவைப்படுத்தப்பட்ட தரம் பிரிக்கப்படாத விலைமதிப்பார்ந்த கற்கள் (வைடூரியங்கள் தவிர்ந்த) மற்றும் விலைமருவிய கற்கள்** | |
| | 7103.10.10 | விலைமதிப்பார்ந்த கற்கள் | விலக்களிப்பு |
| | 7103.10.20 | விலை மருவிய கற்கள் | விலக்களிப்பு |

EOG 11 - 0147

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.